1986 ஏப்ரல் 25] [திரு. சு. பாலன்]

அது இப்போது எடுக்கப்பட்டு விட்டது. ஆகவே அதைச் சுற்றி லும் ஏராளமான குடிசைகள் இருப்பதால் மறுபடியும் அந்தத் தீயணைப்புப் படையை அங்கே வைப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படி ஏற்கனவே ஏராளமாக குடிசைகள் இருந்து தீயணைப்பு நிலையமும் இருந்து அது எடுக்கப்பட்டிருந்தால் உறுப்பினர் அவர்கள் கூறுகிற கருத்தின் அடிப்படையில் அரசு அதைப் பரிசீலிக்கும்.

(ஆ) சென்னை மாநகராட்சி இடுகாடு—சுடுகாடுகளில் ஈமச்சடங்குக்கு வசூலிக்கப்பெறும் கட்டணம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ஜே. ஹேமச் சந்திரன், கோ. வீரய்யன், வி. பி. சிந்தன், அ. ரகுமான்கான் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ''சென்னை மாநகராட்சி அதன் பொறுப்பிலுள்ள மயானங்களில் ஈமச்சடங்கு நடத்துவதற்கான கட்டணத்தை மிக அதிகமாக உயர்த்தியுள்ள தால் மக்களிடையே ஏற்பட்டுள்ள கவலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள் ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

சென்னை மாநகராட்சியின் பொறுப்பிலுள்ள சுடுகாடு மற்றும் இடுகாடுகளில் பிணங்களை எரிப்பதற்கும், புதைப்பதற்கும் மாநக ராட்சியால் 1981 ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்டு 9—2—1986 வரை வசூலிக்கப்பட்ட கட்டண விகிதங்களும், மாநகராட்சி தீர்மானம் எண் 1205/85 நாள் 25—11—1985ன் படி 9—2—1986 முதல் அமுல் செய்யப்பட்டுள்ள திருத்திய கட்டணம் விகிதமும் பின்வருமாறு :—

	பழைய கட்டண விகிதம்.	திருத்திய கட்டண விகிதம்.
12 வயதிற்கு மேற்பட்டவர்கள் எரிப்பதற்கு	ரூ. 100	ரூ. 185
12 வயதிற்கு குறைந்தவர்கள் எரிப்பதற்கு	60	90

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

	பழைய கட்டண விகிதம்.	திருத்திய கட்டண விகிதம்.
12 வயதிற்கு மேற்பட்டவர்கள் புதைப்பதற்கு ..	15	30
12 வயதிற்கு குறைந்தவர்கள் புதைப்பதற்கு ..	10	20

மேற்படி திருத்திய கட்டணத்திலிருந்து, எரிப்பதற்காக ரூ. 10-ம் புதைப்பதற்காக ரூ. 5-ம் தான் சுடுகாடு இடுகாடுகளில் துப்புரவு பணி கட்டணமாக சென்னை மாநகராட்சி கணக்கில் செலுத்தப் படுகிறது. மீதம் உள்ள தொகை எரிபொருள் வாங்க சுடுகாடு இடுகாடு பணியாளர்களால் உபயோகப்படுத்தப்படுகிறது.

2. கடந்த நான்கு ஆண்டுகளில் எரிக்க பயன்படுத்தப்படும் விறகு, வறட்டி, மண்ணெண்ணெய் மற்றும் இப்பொருள் களை கொண்டுவர ஆகும் வாகனச் செலவு ஆகியவை மிக அதிக அளவில் உயர்ந்து விட்டபடியால் மேற்கூறியவாறு கட்டணங்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையில் 12 வயதிற்கு மேற்பட்டவர்களைப் புதைப் பதற்கு ரூ. 15 என்று இருந்ததை ரூ. 30 ஆக உயர்த்தப்பட் டிருக்கிறது. அதைப்போல 12 வயதிற்கு குறைந்தவர்களைப் புதைப்பதற்கு ரூ. 10 என்று இருந்த கட்டணத்தை ரூ. 20 ஆக வும் உயர்த்தப்பட்டிருக்கிறது. அதைப்போல எரிப்பதற்கு ரூ. 100ஆக இருந்த கட்டணம் ரூ. 185 ஆக உயர்த்தியிருக்கிறார் கள். இப்படி கிட்டத்தட்ட 100 சதவீதம் கட்டணங்கள் உயர்த்தப்பட்டிருக்கிற இந்த நிலையில் சென்னை நகரத்தில் வசதியுள்ளவர்களைப் பொறுத்தவரையில் பிரச்னையில்லை. ஆனால் சென்னை நகரில் வறுமைக்கோட்டிற்கு கீழே இருப்பவர் கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் தெருக்களில் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மயானங்களுக்கு செல்லக் கூடிய நேரத்தில் இந்த 100 சதவீத கட்டண உயர்வால் நிச்சயமாக பாதிக்கப்படுவார்கள். ஆகவே வறுமைக்கோட் டிற்கு கீழே இருப்பவர்களை பாதுகாக்கக்கூடிய முறையிலே இந்தக் கட்டணத்தைக் குறைத்து வேண்டுமானால் 10 சதவீதம் அல்லது 5 சதவீதம் மட்டும் அதனை உயர்த்துகிற நடவடிக் கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை விவாதத்தின்போது மாண்புமிகு உறுப்பினர் சைதை துரைசாமி அவர்கள் இதுபற்றி கேள்வி கேட்டு அதற்கு விரிவாக பதில் அளித்திருக்கிறேன். ஏற்பட்டிருக்கிற விலைவாசி

1986 ஏப்ரல் 25] [திரு. ப. உ. சண்முகம்]

உயர்வில் வண்டி வாகனங்களின் கூலி உயர்வு போன்றவைகள்தான் இந்த கட்டண உயர்விற்கு காரணம். வேறு எதுவுமில்லை. மாநகராட்சியின் வருமானத்தை எதிர்பார்த்து இதை உயர்த்த வில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, செத்தவர் களைப் புதைப்பதற்கும், எரிப்பதற்கும் உள்ள கட்டணம் உயர்த் தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு ஹேமச்சந்திரன் சொன்ன தைப் போல தமிழகத்தில்தான் வறுமைக் கோட்டிற்கு கீழே இருப்பவர்கள் எண்ணிக்கை அதிகம். இரண்டாவது மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் அவ்வப்போது உயர்த்துகிற வரி விதிப்புகள் இருக்கின்றன. ஆகவே உயிரோடு இருக்கிற போதுதான் இந்த நிலைமைகள் எல்லாம் இருக்கிறதே, செத்து சுடுகாட்டிற்குப் போனாலாவது நிம்மதியாக இருக்கலாமென்று போனால் அங்கேயும் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே அரசிடமிருந்து ஒன்றைத் தெரிந்துகொள்ள விரும்பு கிறேன். ஆந்திரா முதலமைச்சர் என். டி. ஆர். அவர்கள் இலவச மொட்டை கொண்டு வந்ததைப் போல, நம்முடைய முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்ததைப் போல இலவசமாக எரிக்கிற, புதைக்கிற திட்டத்தை அரசு கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அங்கே பணியாற்றுகிற வெட்டியான் போன்றவர்களுக் கெல்லாம் சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கிறது. விறகு, எண்ணெய் இவைகள் எல்லாம் வாங்க வேண்டியிருக்கிறது. இவைகள் எல்லாம் இலவசமாக கிடைக்கிற நேரத்தில் இதையும் இலவசமாகச் செய்யலாம்.

4. அறிக்கை அளித்தல்.

மதிப்பீட்டுக் குழு.

திரு. இரா. முத்தையா : தலைவர் அவர்களே, சாலைகளும் பாலங்களும் குறித்த மதிப்பீட்டுக் குழுவின் நான்காவது அறிக்கையை (எட்டாவது சட்ட மன்றப் பேரவை) பேரவைக்கு அளிக்கிறேன்.